

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

# பனிமயம்

மே 2023





# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



உங்கள் அனைவருக்கும் பனிமயத் தாயின் இனிய பெயரில் வாழ்த்துகள்!

பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழா நெருங்கி வருகிறது. தங்கத் தேர்ப் பவனிக்கு இன்னும் எத்தனை நாள்கள் இருக்கின்றன என்பதைக் காட்டும் "மின்னணு நாள்காட்டி" (டிஜிடல் கவுண்ட் டவுண்) பேராலய மண்டபத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதுவே திருப்பயணிகள் பலருக்கும் ஓர் ஈர்ப்பாக இருக்கிறது. இந்த மின்னணு நாள்காட்டி 300 நாள்கள் என்பதில் தொடங்கி, ஏப்ரல் மாத இறுதியில் 100 நாளுக்குக் கீழே வந்துவிட்டது.

பெருவிழா அண்மையில் வரவிருப்பதை அடுத்து, பெருவிழா ஆசிகளுக்காக ஒருங்கிணைந்து, உருக்கமாக மன்றாட ஐந்தடுக்குப் பரிந்துரை இறைவேண்டலை கடந்த இதழில் அறிமுகப்படுத்தியிருந்தேன்.

அதன்படி கடந்த 14.04.2023 வெள்ளி அன்று **100 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு** தொடங்கியது. எதிர்பார்த்ததற்கும் மேலாக, 200க்கும் மேற்பட்டோர் இம்மன்றாட்டில் இணைவதாகத் தங்கள் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர். பனிமய அன்னைப் பேராலயப் பங்கையும் தாண்டி, மாநகரின் பிற பங்கினர், சென்னை, கோவை, திண்டுக்கல் போன்ற பிற நகர்களிலும் தன்னார்வத்தோடு இம்மன்றாட்டில் இணைந்துள்ள அனைவருக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

"**தொடர்ந்து இறைவனிடம் வேண்டுங்கள்.** விழிப்போடும் நன்றி உணர்வோடும் அதில் ஈடுபடுங்கள்" (கொலோ 4:2) என்னும் பவுலடியாரின் அறிவுரைக்கேற்ப, விழிப்போடு தொடர்ந்து மன்றாடுவோமாக. அப்போது, "இதோ நான் இந்த மக்களுக்காக மீண்டும் **வியத்தகு செயல் புரிவேன்.** அது விந்தைக்கு மேல் விந்தையாக இருக்கும்" (எசா 29:14) என்னும் இறைவாக்கு மீண்டும் நம் நடுவில் நிறைவேறும்.

அந்த நம்பிக்கையுடன் இறைவேண்டல் செய்வோம். வாருங்கள், ஒருங்கிணைந்து மன்றாடுவோம். பெருவிழா நாள்களை எண்ணற்ற ஆசிகளின் நாள்களாக மாற்றுவோம்!



என்றும் அன்புடன்,
**அருள்பணி. குமார்ராஜா**
பங்குத் தந்தை & திருத்தல அதிபர்

உதயம் 23 தாரகை 9

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
அருட்பணி. குமார்ராஜா
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : 'பனிமயம்'
தூய பனிமய அன்னை பேராலயம்
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### திருஅவை இயக்கங்களும் குழுக்களும்....

திருஅவையின் இயக்கங்களும் குழுக்களும் அன்றாடம் தமது நற்செய்தி அறிவிப்புப் பணியை மீண்டும் கண்டுணர்ந்து, தங்கள் தனிவரங்களை முன்னிறுத்தி உலகின் தேவைகளுக்குத் தொண்டாற்ற நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. மரியன்னையின் முன்னோடிகள் :
   ஈசாக்கின் மனைவி ரெபேக்கா ....................4
   அருள்பணி. குமார்ராஜா

2. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்.........6
   செல்வராஜ் மிராந்தா

3. பனிமயம் - மீள் பார்வை ....................8
   கலாபன் வாஸ்

4. பனிமய அன்னை :
   பனிமயம் பாடும் பாவலர்கள் ....................10
   தி. சொர்ணராஜன் விக்டோரியா

5. நம் திருஅவை, நமது பெருமை :
   வியத்தகு நகரம் வத்திக்கான்! ....................12

6. பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழா 2023
   வினா - விடைப் போட்டி....................14

7. தங்கத் தேர் 2023 மைல் கற்கள் ....................16

8. தங்கத் தேர் கவிதைகள் ....................18

9. விவிலியப் போட்டி ....................19

10. பனிமயப் பகிர்வு ....................22



மரியன்னையின் முன்னோடிகள்: 3

# ஈசாக்கின் மனைவி ரெபேக்கா

பழைய ஏற்பாட்டின் புகழ்பெற்ற பெண்கள் வரிசையில் மூன்றாவதாகத் தோன்றுபவர் முதுபெருந்தந்தை ஈசாக்கின் மனைவியான ரெபேக்கா. இவரும் அன்னை மரியாவின் முன்னோடியாக விளங்குகிறார் என்று திருமறைத் தந்தையர் சுட்டிக் காட்டுகின்றனர். ரெபேக்காவின் நல்லியல்புகள் மரியன்னையின் நற்பண்புகளுக்கு முன்னடையாளமாகத் திகழ்வதாக இவர்கள் சுட்டுகின்றனர்.

**1. பரிவு நிறைந்தவர்.** ரெபேக்காவின் பரிவு நிறைந்த உள்ளத்தை எடுத்துக்காட்டும் ஒரு நிகழ்வைத் தொடக்க நூல் 24ஆம் அதிகாரத்தில் காண்கிறோம். ரெபேக்கா நீரூற்றுக்குள் இறங்கி தன் குடத்தை நிரப்பிக்கொண்டு மேலேறி வந்தபோது, ஆபிரகாமின் வேலைக்காரர் குடிக்கத் தண்ணீர் கேட்டார். அப்போது ரெபேக்கா, "குடியுங்கள் ஐயா", என்று **விரைந்து** தம் குடத்தைத் தோளினின்று இறக்கி அவருக்குக் குடிக்கக் கொடுத்தார் (24:18).

"விரைந்து" என்னும் சொல்லாடல் எலிசபெத்துக்கு உதவி செய்வதற்காக அன்னை மரியா "விரைந்து" (லூக் 1:39) சென்றதை நமக்கு நினைவூட்டுகிறது. அது மட்டுமல்ல, "உங்கள் ஒட்டகங்களும் குடித்து முடியுமட்டும் நான் தண்ணீர் இறைத்துக் கொடுப்பேன்" என்று சொல்லி நீரூற்றுக்குள் ஒடிச்சென்று ஒட்டகங்கள் அனைத்திற்கும் தண்ணீர் இறைத்து ஊற்றினார். அந்த வேலைக்காரர் இதைக் கண்டு "வாயடைத்துப் போய்" நின்றார் என்று சுவைபடச் சொல்கிறது தொடக்க நூல்.

கானாவூர் மணவிழாவில் திராட்சை இரசம் தீர்ந்ததை அறிந்து, தமது முன்னெடுப்பால் இயேசுவை முதல் அற்புதம் செய்யத் தூண்டி அனைவருக்கும் நல்ல இரசத்தைப் பரிமாறச் செய்து அனைவரையும் வாயடைக்கச் செய்த அன்னை மரியாவின் பரிவுள்ளத்திற்கு ரெபேக்கா முன்னோடியாக இருப்பதை நாம் மறுக்க இயலாது.

**2. ஆசி பெற்றவர்.** அதே 24ஆம் அதிகாரத்தில் ஈசாக்குக்கு மண ஒப்பந்தம் செய்யப்பட்ட போது, அவரது சகோதரர்கள் "ரெபேக்காவுக்கு ஆசி வழங்கி, எம் சகோதரியே, ஆயிரம் ஆயிரமாக நீ பெருகுவாய். உன் வழிமரபினர் தங்கள் பகைவர்களின் நகர்களை உரிமையாக்கிக் கொள்வார்களாக" (தொநூ 24:60) என்று வாழ்த்தினர்.

இந்த நிகழ்வு "பெண்களுக்குள் நீர் **ஆசி பெற்றவர்**; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே" (லூக் 1:42) என்று எலிசபெத் மரியன்னையை வாழ்த்திய நிகழ்வின் முன்னோடி என்று நாம் கருதலாம்.

**3. மகனுக்குத் தந்தையின் ஆசிகளைப் பெற்றுத் தந்தவர்.** ரெபேக்கா தம் இளைய மகனான யாக்கோபுக்கு ஆலோசனை வழங்கி, தந்தையான ஈசாக்குக்கு யாக்கோபின் கையால் விருந்து வழங்கி "வானின் பனித்துளியும் மண்ணின் செழுமையும் மிகுந்த தானியமும், திராட்சை இரசமும் கடவுள் உனக்கு வழங்குவாராக" (தொநூ 27:28) என்னும் புகழ்பெற்ற ஆசிமொழிகளைப் பெறச் செய்தார்.

இந்நிகழ்வைச் சுட்டிக்காட்டும் திருமறைத் தந்தையர் அன்னை மரியா தம் மகனைக் கீழ்ப்படிதலுள்ளவராக வளர்த்து, "என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவர் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்" (மத் 3:17) என்று விண்ணகத் தந்தையிடமிருந்து பாராட்டு பெறச் செய்தார் என்று மரியன்னையைப் போற்றுகின்றனர்.

**4. "நான் கன்னி ஆயிற்றே".** ரெபேக்காவை அறிமுகப்படுத்தும் தொடக்க நூலாசிரியர் "அவர் எழில்மிக்க தோற்றமுடையவர். ஆண் தொடர்பு அறியாத **கன்னிப் பெண்**" (தொநூ 24:16) என்கிறார்.

இந்த அறிமுகம் "நான் கன்னி ஆயிற்றே" (லூக் 1:34) என்று மரியா சொன்னதையும், "**கன்னி** கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார்" (மத் 1:22) என்று மத்தேயு நற்செய்தியாளர் விளக்குவதையும் நமக்கு நினைவுபடுத்துகிறது.

**5. ரெபேக்காவின் மகனும், மரியாவின் மகனும்.** மரியன்னைப் புனிதரான லூயி மரிய மான்ட்ஃபோர்ட் மரியன்னையைப் பற்றி எழுதும்போது ரெபேக்கா எவ்வாறு அன்னை மரியாவின் முன்னோடியாகத் திகழ்ந்தார் என்பதைச் சுவைபட எழுதியுள்ளார்.

ரெபேக்காவின் இரு மகன்களான ஈசா, யாக்கோபு இருவருக்கும் இடையேயுள்ள வேறுபாடுகளை முதலில் அவர் விளக்குகிறார். ஈசா வேட்டையாடுவதற்காக அடிக்கடி வெளியே சென்றான், வீட்டில் இருப்பதே இல்லை, தன் தாயின்மீது அதிகப் பாசமும் இல்லை, தன்னலம் நிறைந்தவனாக, உணவில் அதிக ஆர்வமுள்ளவனாக இருந்தான். தன் தம்பியான யாக்கோபின்மீது பொறாமையும், வெறுப்பும் கொண்டிருந்தான்.

இளையவனான யாக்கோபோ "அம்மா செல்லமாக" இருந்தான். தாயின்மீது கொண்ட பாசத்தால் வெளியே செல்லாமல் வீட்டிலேயே இருந்தான். தாய்க்கு எல்லாவிதத்திலும் கீழ்ப்படிந்திருந்தான். தாய் சொன்னதற்காகவே அண்ணனைப் போல நடித்து, தந்தை ஈசாக்கின் ஆசியையும் பெற்றுக்கொண்டான்.

ரெபேக்கா போலவே மரியன்னையும் தம் அன்பு மகன் இயேசுவை பாசத்தோடு வளர்த்தார். இயேசுவும் 30 ஆண்டுகள் தாயை விட்டுப் பிரியாமல், அவருக்குப் பணிந்து நடந்தார். தாய்க்குக் கீழ்ப்படிந்து வாழ்ந்ததாலேயே, விண்ணகத் தந்தையின் ஆசிகளையும் பெற்றுக்கொண்டார்.

இந்த ஒற்றுமைகளைச் சுட்டிக்காட்டும் புனித லூயி மரிய மான்ட்ஃபோர்ட் யாக்கோபு போலவும், இயேசுவைப் போலவும் கிறித்தவராகிய நாமும் மரியன்னையை அன்பு செய்யவேண்டும் என்கிறார். நாமும் மரியன்னைக்குப் பணிந்து நடக்க வேண்டும். அவரது அரவணைப்பை விட்டு விலகாது, பாவ சூழ்நிலைகளுக்கு விலகி நடந்து, தந்தை இறைவனின் பாராட்டைப் பெறவேண்டும் என்கிறார் புனித மான்ட்ஃபோர்ட். இவ்வாறு, ரெபேக்கா அன்னை மரியாவின் சிறப்புக்குரிய முன்னோடி ஆகிறார்!




**அருள்பணி. குமார்ராஜா**

24



# பனிமய அன்னை பேராலய

## மலரும் நினைவுகள்...



விவிலிய இறையியலில் (Biblical Theology) முனைவர் பட்டம் பெற்ற அருள்முனைவர் லெரின் டிரோஸ் அடிகளார் 2014ஆம் ஆண்டு தூய பனிமய மாதா பேராலய அதிபராகவும் பங்கு பணித்தளத் தந்தையாகவும் பொறுப்பேற்று 2019ஆம் ஆண்டு வரை பணியாற்றினார்கள். பிரச்சனைகளின் பிறப்பிடம் என சில சக குருக்களால் குறிப்பிடப்பட்ட ஒரு பழம்பெரும் மறைபணித்தளத்தின் முழு பொறுப்பையும் ஏற்றெடுப்பதில் தயக்கமோ சஞ்சலமோ இன்றி பணியாற்றத் தொடங்கினார்.

நீர் ததும்பா நிறைகுடம்போல் யார் மனமும் புண்படாதவாறு நடைபோட்ட மாதங்களுக்கிடையில் அவ்வப்போது எழுந்த சிறுசிறு சலசலப்புகளும்கூட அவர்முன் பிசுபிசுத்துப் போயின. ஆலயத்தின் உள்ளும் புறமும் நிகழ்வன யாவையும் தனது அலுவலகத்தில் இருந்தவாறே காணத்தக்க வகையில் மின்னணுக் கண்களாகக் காமிராக்களை நிறுவி கவனித்து வந்தார்.

நூற்றாண்டுகள் பழைமை வாய்ந்த குருக்கள் இல்லம் பழுதுபட்ட நிலையிலிருந்ததைக் கண்டு அதைச் சீர்படுத்த முயற்சித்தார். முன்பு ஓர்னலாஸ் பள்ளிக்கூடமாக பயன்படுத்தப்பட்ட தரைத்தளத்தில் ஒரு அறையில் பங்கு அலுவலகமும் முன்பக்கத்தில் ஒரு சுரூபக்கடை என இரண்டு இடங்கள் மாத்திரம் பயன்படுத்தப்பட்டன. மற்ற கீழ்த்தளம் முழுவதும் பயனற்றுக் கிடந்தன. மேல்தளத்தில் குருக்கள் இல்லம்! நூற்றாண்டுகளுக்கு முன் கப்பல்களோடு செய்திப் பரிமாற்றம் செய்ய கொடிகள் ஏற்றி சமிக்ஞை செய்யும் இடமாக பயன்படுத்தப்பட்டு, பிற்காலத்தில் வரவேற்பு அறையாக பயன்பாட்டில் இருந்த விசாலமான இடமும் பழுதுபட்ட நிலையிலேயே இருந்தது. வருடாந்தர மராமத்துக்களும் வர்ணப் பூசல்களும் நிரந்தரத் தீர்வாகாது என்பதை நன்கு உணர்ந்திருந்தார்.

நவீன காலத்துக்கு ஏற்றவாறு புதிதாக அதே இடத்தில் குருக்கள் இல்லம் எழுப்ப வேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் முளைத்த போது பல மாதங்கள் உருண்டோடிப் போயின. முதலில் தூய சவேரியார் சிற்றாலயத்தில் பணியைத் தொடங்கினார். கீழ்த்தளத்தில் சிற்றாலயமும் மாடியில் குருக்கள் இல்லமும் – திருவிழாக் காலங்களில் கலந்துகொள்ளும் வெளியூர் குருக்களும் தங்கக்கூடிய விதத்தில் இடவசதியும் – பங்கு அலுவலகத்தோடு கூடியவாறு தூய சவேரியார் சிற்றாலயமும் குருக்கள் இல்லமும் கட்டி முடிக்கப்பட்டவுடன்

பழைய குருக்கள் இல்லத்தை காலிசெய்து புதிய இடத்துக்கு மாறினார்கள்.

அதன்பிறகு பழைய குருக்கள் இல்லம் இடித்து தரைமட்டமாக்கப்பட்டு, அதே இடத்தில் நவீன பாணியில் சகல வசதிகளுடன் குருக்கள் இல்லம் கட்டி முடிக்கப்பட்டது. அதன் ஒரு பாகமாக ஒரு கார் ஷெட்டும் அமைக்கப்பட்டது. புனித சவேரியார் சிற்றாலய மேல்தளத்தில் இருந்த குருக்கள் தங்குமிடம் புதிய கட்டிடத்திற்கு மாற்றப்பட்டது.

1712/13ஆம் ஆண்டு கட்டப்பட்ட பரிசுத்த பனிமய அன்னை ஆலயச் சுவர்கள் கடலில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட நுரைக் கற்களாலும் விரல் சல்லிகள் நீற்றி எடுக்கப்பட்ட சுண்ணாம்புடன் மணல் சேர்த்து அரைத்து பதநீர் சேர்த்துக் குழைத்துக் கட்டப்பட்டது. உறுதியான அச்சுவர்களுக்கு ஒரு குறை உண்டு. மழைக்காலங்களில் காற்றின் ஈரப்பதத்தால் நீர் கசியத் தொடங்கும். அதனால் சிமெண்ட் மேல்பூச்சு பொறிந்து போகும். அதைக் கவனித்த அருள்தந்தை, ஆலய சுவர் உள்ளும் புறமும் (water proof) நீர்க்கசிவு எதிர்ப்பு சக்தி கொண்ட கலவையால் வெண்ணிறத்தில் மிக அழகுபட பளிங்குபோல் தோற்றமளிக்கும் வகையில் பூசி முடித்தார்கள். அதோடு படிக்கட்டுகள் யாவையும் ஒழுங்குபடுத்தி புதிப்பித்தார்கள்.

எப்போதும் முதியவர்கள் மேல் பற்றும் பாசமும் மதிப்பும் கொண்ட அருள்முனைவர் லெரின் டிரோஸ் அடிகளார், முதியவர் ஆலயத்துக்குள் செல்வதற்கும் வெளிவருவதற்கும் படும் பாட்டினைக் கண்டு அனுதாபப்பட்டிருக்கின்றார்கள். அவ்வனுதாப உணர்வுதான் முதியவர்கள் சிரமமின்றி ஆலயத்துக்குள் ஏறிச் செல்லவும் இறங்கி வெளிவரவும் ஏதுவாக சாய்வு தளங்களை சில வாசல்களின் பக்கம் அமைக்க ஏற்பாடு செய்தார்கள்.

ஆலயத்தை அழகுபடுத்தி, குருக்கள் இல்லத்தை நவீனப்படுத்தி, தற்போதைய டிஜிட்டல் யுகத்தின் சவுகரியங்கள் சிலதை அவையிரண்டிலும் புகுத்தி, 'ஹைடெக்காக' மாற்றியமைத்த அருள்தந்தை, தான் அமைத்துக் கொடுத்த அந்த வசதிகளை அதிக நாட்கள் பயன்படுத்த இயலாமல் 2019ஆம் ஆண்டு மணப்பாடு புனித யாகப்பர் ஆலயத்திற்கு மாற்றப்பட்டார்கள். இயேசு சபையைச் சார்ந்த பல ஐரோப்பிய குருக்கள் தங்கி இருந்த யாகப்பர் ஆலய குருக்கள் இல்லமும் அவர் கைவண்ணத்தில் அழகு படுத்தப்படும் என நம்பலாம்.

- நிறைவு -



**செல்வராஜ் மிராந்தா**

# தவக்காலக் காணிக்கை



தவக்காலப் பசி, பிணி ஒழிப்புக் காணிக்கையாக 28 அன்பியங்களில் இருந்தும் மொத்தம் **ரூ. 2,44,915** (கடந்த ஆண்டு **ரூ. 2,19,825**) பெறப்பட்டுள்ளது. தாராளமாகக் காணிக்கை வழங்கிய குடும்பங்களை உயிர்த்த ஆண்டவர் நிறைவாக ஆசீர்வதிப்பாராக! இந்த ஆண்டு பெரிய வெள்ளியன்று எடுக்கப்பட்ட காணிக்கை **ரூ. 1,47,580.** இவை இரண்டுடன் நமது பங்கிலிருந்து கூடுதலாக **ரூ. 37,505** சேர்த்து, நமது மறைமாவட்ட பசி, பிணி காணிக்கையாக **ரூ. 2,30,000** கொடுத்துள்ளோம். புது டெல்லியுள்ள அகில இந்திய ஆயர் பேரவையின் கம்யூனியோ இந்தியா நிதியத்துக்கு **ரூ. 2,00,000** அனுப்பியுள்ளோம்.

36

# 'பனிமயம்' 2017 – மீள் பார்வை

### லொரெட்டோ திருத்தலம்




உலகில் எத்தனையோ புகழ்பெற்ற மரியன்னைத் திருத்தலங்கள் உள்ளன. ஆனால், அவற்றில் எதுவுமே, இத்தாலியின் லொரெட்டோ திருத் தலத்துக்கு இணையாகாது. மத்திய இத்தாலியின் ஒரு மலைநகரம்தான் லொரெட்டோ.

"இந்த லொரெட்டோ திருத்தலத்தைப் பற்றி நாங்கள் கேள்விப்பட்டதில்லையே" - என நீங்கள் நினைக்கலாம். இருப்பினும், இந்தத் திருத்தலம்தான் தன்னிகரற்ற மரியன்னைத் திருத்தலம் எனக் காலங்காலமாகக் கருதப் பட்டு வருகிறது.

காரணம், நமக்குப் பெரும் வியப்பைத் தரும். இந்தத் திருத்தலத்தில்தான், நாசரேத்தூரில் அன்னை மரியா வாழ்ந்த வீடு இருக்கிறது.... என்ன, தலை சுற்றுகிறதா?

நாசரேத்திலிருந்த அன்னை மரியாவின் வீடு, **'புனித இல்லம்'** (Holy House) என்று அழைக்கப்பட்டது. கி.பி. 313ஆம் ஆண்டில் பேரரசர் கான்ஸ்டன்டைன் அந்த இடத்தில் பேராலயம் கட்டினார்.

1291ஆம் ஆண்டு மே 10ஆம் நாள், வானதூதர்கள், இந்த இல்லத்தை அடிக்கல்லோடு பெயர்த்து, குரோவோசியா நாட்டில், **தெர்சாத்தோ** சிறு நகருக்கு எடுத்துச் சென்று வைத்தனர். இஸ்லாமியப் படையெடுப்புகள் நடந்ததால், வானதூதர்கள் அந்த இல்லத்தை மீண்டும் அகற்றி, இத்தாலியில் **ரெகாந்தி** என்ற இடத்திலும், பின்னர், தற்போதுள்ள லொரெட்டோவிலும் வைத்தனர். அற்புதமாக, இந்த மூன்றிடங்களிலும் அஸ்திவாரமே இல்லாமல், இந்த வீடு வைக்கப்பட்டிருந்தது.

இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட புனிதர்கள், முத்திப்பேறு பெற்றவர்கள், இத்திருத்தலம் வந்து சென்றுள்ளனர். லொரெட்டோ மாதா, விமானப் பைலட்டுகளின் பாதுகாவலி.... காரணத்தை நீங்களே யூகித்துக் கொள்ளுங்கள். - **அருள்பணி. குமார்ராஜா.**

### அன்னையின் ஆசீர்

நம் மீட்பர் இயேசுவை உருத்தாங்கி, உலகிற்குக் கொண்டு வந்து, அவருடைய பாதையிலேயே பயணித்து, ஒப்புயர்வற்ற சீடத்தியாகத் திகழ்ந்து, அவருடைய போதனை, துன்பம், துயரம், இறப்பு, உயிர்ப்பு, மாட்சிமை, விண்ணக மகிமை என எல்லாவற்றிலும் பங்கு பெற்றவர் அன்னை மரியாள்.

அன்னை மரியாளாக வாழ்வது கடினம். துன்பத்தை அனுபவித்துவிடலாம். ஆனால், துன்பத்தில் ஆறுதல் கூறுவது, துன்ப துயரங்களோடு வியாகுலத் தாயாக வாழ்வது, நம்பிக்கை இழக்காமல் கொண்ட கொள்கையில் நிலைத்திருப்பது, பிறரை ஆற்றுப் படுத்துவது, அரவணைப்பதெல்லாம் அன்னை மரியாளால் மட்டுமே சாத்தியம் ஆக்கப்பட்டவை. ஆகவே, அவர் ஆசீர் பெற்றவராக இருக்கின்றார். ஆசிபெற்ற அத்தாய், நம்மையும் ஆசீர்பெற அழைக்கின்றார். இதற்கு, நாம் அன்னையின் வாக்கிற்கிணங்கச் செயல்படுகின்றபொழுது, அன்னை பெற்ற ஆசியை நாமும் பெற முடியும். "அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" - என்ற அன்னையின் வார்த்தையை நாம் வாழ்வாக்குவோம். அன்னை மரியாள், நம் பனிமயத்தாய் நமக்குக் காட்டும் பாதையும் அருளும் ஆசீரும் இதுதான். - **அருட்பணி. பீட்டர், மதுரை.**

**பனிமயமே!**

நிலையில்லா மனிதவாழ்வு
நீர்க்குமிழி போன்றதுதான்
அலைக்கழிக்கும் சோதனைகள்
அதற்குள்ளும் எத்தனையோ?
மலைபோல வந்தாலும்
மாதாவுன் அருளாலே
நிலைகுலைந்து வாழமாட்டோம்
நீயிருக்க பனிமயமே!

**- செல்வராஜ் மிராந்தா**

**மூன்று ராஜாக்கள்**
**மூன்று குரங்குகள்!**

ஆண்டவரைச் சந்திக்கும் வரை விண்மீன்கள் தேவைப்பட்ட ஞானிகளுக்கு, அதற்குமேல் வழிகாட்டுதல் தேவைப் படவில்லை. உலகின் ஒளியான இயேசு, நம் வாழ்வில் வந்தபின் அவரைத்தவிர வேறு பாதையேது? நானே வழியும் ஒளியும் என்ற இயேசு, இந்த இரண்டாகவும் இருந்து அந்த ஞானிகளுக்கு வழியானதைப்போல, நமக்கும் வழியாக இருக்கின்றார்.

காந்தியின் மூன்று குரங்கு பொம்மைகளைப் பற்றித் தெரியும். அவைகளின் சாராம்சத்தைக் கொஞ்சம் கிறித்தவம் கலந்து பார்ப்போம்....

**பிதாவைப்போல,** படைப்புகள் அனைத்திலும் நல்லனவற்றையே **காண்போம்!**

**இயேசுவைப்போல,** நற்செய்தியை அனைவரும் **கேட்கும்படி,** ஏற்கும்படி உரைப்போம்!

**தூயஆவியைப்போல,** உண்மையான **அக்கினி நாவால்,** உலகின் தீமைகளை எதிர்த்து, கிறிஸ்துவை அறிக்கையிடுவோம். - **செல்வன் ஜாக்சன் (முனைவர்).**

**பாத்திமா அன்னை**

போர்த்துக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பன் நகரத்திலிருந்து 120 கிலோ மீட்டர் தூரத்தில் கோவேதா ரியா பாத்திமா என்ற வனப்பகுதி உள்ளது. இந்த இடத்தில் 1917ஆம் ஆண்டு, மே மாதம் 13ஆம் நாள் முதல், அக்டோபர் 13ஆம் நாள் முடிய, ஒவ்வொரு



மாதமும் 13ஆம் நாள் அன்று, ஆறு தடவைகள், 10 வயது **லூசியா**, ஏழு வயது **ஜெசிந்தா**, ஒன்பது வயது **பிரான்சிஸ்** ஆகிய மூவரும், ஆடுகளை மேய்த்துக் கொண்டிருந்தபோது பாத்திமா அன்னை காட்சி அளித்து, மனம் திறந்து அளவளாவிப் பேசினார்கள்....

பாத்திமாக் காட்சியில் லூசியா தான் நேரில் பார்த்த மாதாவின் தோற்றத்தை நேர்முகமாக அறிவித்தார். லூசியா சொன்னது போன்று மூன்று பாத்திமா சுரூபங்களை வடிவமைத்தார்கள். அதில், முதல் சுரூபம் உரோமை பேதுரு ஆலயத்திற்குள் நிறுவப் பட்டது. மூன்றாவது சுரூபம் 1950ஆம் ஆண்டு உலகமெல்லாம் பவனியாக எடுத்து வந்து, நம் தமிழகத்திற்கும் அன்னை பவனி வந்தது நமக்கு நினைவில் நிற்கலாம்.

தூத்துக்குடி மறைமாவட்ட குரு **அருட்பணி. அந்தோணி S. பர்னாந்து** சுவாமிகள், தனது செல்வாக்கைப் பயன்படுத்தி, மூன்றாவது சுரூபத்தை **வள்ளியூர் பாத்திமா அன்னை ஆலயத்திற்கு** வாங்கித் தந்துள்ளார்கள். - **ஆசிரியர் D. அற்புதசாமி.**

**நாசரேத்தூர் தச்சன் சூசை**

1985ஆம் ஆண்டு, திருத்தந்தை 12ஆம் பத்திநாதர், தொழிலாளர்களின் பாதுகாவலராக தூய சூசையப்பரை அறிவித்து, மே முதல் நாளைச் சிறப்புச் செய்தார்.

எளிமையாக, நேர்மையாக, நீதிமானாக, கற்புள்ளவராக, தொழிலாளர்களின் பாதுகாவலராக வாழ்ந்த உன்னத, தூய சூசையப்பரே! எங்களுக்காக இயேசுவிடம் மன்றாடுங்கள். - **ஜோ. மஸ்கரனாஸ்.**



**கலாபன் வாஸ்**
94863 90793

பனிமய அன்னை 31

# பனிமயம் பாடும் பாவலர்கள்

## 4. கவிஞர் அருள்திரு. பிரான்சிஸ் முறாய்ஸ் சே.ச.



### கொடி மரப் பாட்டு
*(வரிப்பாடல்)*

கோவில் முகப்பிலே கொடிமர மீதிலே
  கொடி அசைந்தாடுது பார் - எங்கள்
தேவி பனிமயத் தாயின் பேராலயம்
  இதுவெனச் சொல்லுது பார்.

நானூறு ஆண்டுகள் நம்மைப் புரந்திட்ட
  நாயகி ஆலயம் பார் - இவள்
கூன்மதிப் பதமலர் தொழுபவர்க் கொருகுறை
  குவலயத் தில்லையே பார்.

கடலெழு அலைகள்மேல் இரவை நாம்கழித்துக்
  கரையினை அடுத் திடவே - எங்கள்
கண்களிலே முதல் தென்பாட எம்மனம்
  களித்திடும் கொடிமரம் பார்.

கொந்தளித் தெழும்பிடும் கடலினில் தோணியைக்
  கொண்டு செலுத்து கையில் - எங்கள்
சந்தமரியே எந்துணை நீ யென்னும்
  சப்தம் முழங்குது பார்.

இரவிலும் பகலிலும் கரையிலும் கடலிலும்
  என்ன தாம் செய்திடினும் - இவள்
பெருமணி ஓசைஎம் காதினில் தொனித்திட
  உளம் புரண்டெழும்புது பார்.

கொண்ட பவத்தினால் எண்ணங் கலங்கிட
  திக்குத்திக் கென் றிருப்ப - எமக்
குண்டே ஒருமாதா என்றிவள் பாதத்தில்
  ஓடி ஒளிந்திடல் பார்.

காசில்லை வீட்டில் உலைவைக்க என்று பெண்
  கண்ணைக் கசக்கி னாலும் - எங்கள்
தேவிக்குரிய பல் சிறப்பினில் ஒருகுறை
  செய்திடோம் செய்திடோம் பார்.

எழுதுறை மக்களின் தேவியென நாளும்
  எமை அரசாளுவாள் பார் - ஒரு
பழுதற இதுவரை காத்தவள், இனியுமே
  காத்திடும் பனிமயம் பார்.

### கோபுர மணியோசை
*(இரண்டடி எண்சீர் விருத்தம்)*

மாதா கோவிலின் கோபுரத் தெங்கும்
  மணியெழு மோசை பரவியே வானத்
தூதனைப்போல வெங்கணும் ஓடி
  செபித்திட மக்களைத் தூண்டுதல் கேட்டேன்.

ஒன்றின்பின் ஒன்றாய் ஒலித்திடும் அலைகள்
உளத்தினில் ததும்பும் உணர்ச்சியை ஊட்டி
கன்றிய மனத்தையும் வதங்கிய முகத்தையும்
கர்த்தனின் பாதம் எழுப்புதல் கேட்டேன்.

நாளினை முடித்தோம், வெயிலிடை உழைத்தோம்
நலிவுறச் சோர்ந்தோம், இறுதியில் பரமன்
தாளினைச் சேர்ந்தோம், வெற்றியுந் தோல்வியும்
தயக்கமில் லாதவன் காதினில் மொழிவோம்.

எட்டிய வகையே முயன்றனன், தந்தாய்,
விழுந்தேன், சோம்பினேன், மனத்தெனை யுறுத்த
எழுந்து நான் மேலும் நடந்திட முயன்றேன்
இருளடர் பாதையில் இடறினேன் மீண்டும்.

கனவினில் பற்பல காரிய முடிப்பதாய்க்
கண்டேன், கையினில் ஒன்றையுங் காணோம் ;
மனதிடை லட்சிய உணர்ச்சியில் மிதந்தேன்,
வாழ்க்கையோ பொய்த்து வெறுமனே நிற்கும்.

நித்திய முகட்டில் மானிடர் வாழ்க்கை
நிமிடமே ஒளிர்ந்து மறைந்திடு மின்னல்;
உத்தம வழியில் சீவியப்பயனை
உணர்ந்திடு வகைநீ உரைத்திடாய், தந்தாய்

வெற்றியின் முழக்கம் முழக்குவர் பிறரே,
வேண்டிலேன் ஒன்றும், நாணய மெல்லாம்
புற்றினில் புதைத்தேன், கணக்கு நீகேளாய்
குழந்தையின் வழக்கில் குறைஎவர் காண்பார்?

இரவு நெருங்குது, தூர விளக்குகள்
இருளிடைக் கன்றிய கதிர்களை வீசுப
இரவு நெருங்குது, உன்காலடி ஒலிப்ப
இன்னும் சிலகணம் பின்னர் அமைதி.

(நன்றி : பனிமய மலர்' - 1955,
கடலோரக் கவிச்சோலை - 2014)
மரியே வாழ்க !



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**



## அன்புடன் வரவேற்கிறோம்

**நமது பங்கில் புதிதாக இணைந்துள்ள பின்வரும் குடும்பங்களை வரவேற்கிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 60. | விக்டர் | இரக்கத்தின் மாதா | 83 |
| 61. | பீரதீப் | மிக்கேல் அதிதூதர் | 70 |
| 62 | கிறிஸ்டியான் | மிக்கேல் அதிதூதர் | 71 |
| 63. | நிவாஸ் | மிக்கேல் அதிதூதர் | 72 |

## அன்புடன் வழியனுப்புகிறோம்



**நமது பங்கைவிட்டு வெளியேறிய பின்வரும் குடும்பங்களை வாழ்த்தி வழியனுப்புகிறோம்.**

| எண் | தலைவர் | அன்பியம் | குடும்ப அட்டை எண் |
|---|---|---|---|
| 53 | ரொசாரி மச்சாடோ | கிறிஸ்தரசர் | 33 |
| 54 | அந்தோணி பர்னாந்து | சூசையப்பர் | 06 |

நம் திருஅவை, நமது பெருமை - 15

சென்ற இதழ் தொடர்ச்சி.....

# வியத்தகு நகரம் வத்திக்கான்!



மைக்கேல் ஆஞ்சலோவின் பிரபலமான பியத்தா (Pieta) (இயேசுவின் உடலைத் தாங்கிய மரியன்னையின்) சுருபம் இக்கோவிலினுள்ளேதான் இருக்கிறது. திருஅவையின் யூபிலி ஆண்டுகளில் மட்டுமே திறக்கப்படும் "புனித கதவு" (Holy Door) இக்கோவிலில்தான் உள்ளது. இப்பேராலயத்தின் வெளியிலுள்ள வளாகத்தில் 140 புனிதர்களின் சுருபங்கள் உள்ளன.

உலகப் புகழ் பெற்ற ஓவியரும், சிற்பியுமான மைக்கேல் ஆஞ்சலோவின் கைவண்ணங்கள் வத்திக்கான் நகரில் நிறைந்துள்ளன. அவரது ஓவியங்கள் **சிஸ்டைன் சிற்றாலயத்தின்** (Cistine Chapel) மேற்கூரைகளில் வரையப்பட்டுள்ளன. அவற்றுள் இறுதித் தீர்ப்பு (Last Judgment), ஆதாமின் படைப்பு போன்றவை மிகவும் பிரபலமானவை. சிஸ்டைன் சிற்றாலயத்தில்தான் புதிய திருத்தந்தையைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

வத்திக்கான் **அருங்காட்சியகம்** (Vatican Museum) இந்நகரின் இன்னொரு புகழ் பெற்ற இடம். இந்தக் காட்சியகத்தில் திருஅவையின் பெருமையைப் பறைசாற்றும் ஆயிரக் கணக்கான ஓவியங்கள், காட்சிப் பொருள்கள் வைக்கப்பட்டுள்ளன. ஆண்டுதோறும்

6 மில்லியன் பார்வையாளர்கள் இந்த அருங்காட்சியகத்தைப் பார்வையிடுகின்றனர் என்பது ஒரு சாதனைத் தகவல்.

கி.பி. 1475ஆம் ஆண்டு உருவான **வத்திக்கான் நூலகம்** உலகின் மிகப் பழமையான, பெரிய நூலகங்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது, இங்கே 75,000 சுவடிகள் உள்ளன. உலகின் எல்லா நாடுகளைச் சேர்ந்த நூல்கள், ஏடுகள் இங்கே பாதுகாக்கப் படுகின்றன. தமிழகத் திருஅவையின் பல வரலாற்றுக் குறிப்பேடுகள் வத்திக்கான் நூலகத்திலிருந்துதான் திரட்டப்பட்டன என்பது நினைவில் கொள்ளத்தக்கது.

1931ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட **வத்திக்கான் வானொலி** இந்நகரிலுள்ள இன்னொரு சிறப்பம்சம். உலகின் 47 மொழிகளில் இந்த வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறது. இரண்டாம் உலகப் போரின்போது, உண்மையான செய்திகளை அறிந்துகொள்ள மக்கள் வத்திக்கான் வானொலியையே நாடினார்கள் என்பது பெருமையான ஒரு தகவல். இயேசு சபையினரே இந்த வானொலியை நிர்வகித்து வருகின்றனர்.

“லொசர்வாத்தோரே ரொமானொ” (L'Osservatore Romano) என்னும் செய்தி ஏடுதான் வத்திக்கானிலிருந்து வெளிவரும் **அதிகாரபூர்வமான இதழ்**. திருத்தந்தை மற்றும் திருஅவையின் அனைத்து செய்திகளையும் வெளிக்கொணரும் இதழ் இதுவே.

வத்திக்கான் நகரின் தனிச் சிறப்புகளுள் இன்னொன்று அங்குள்ள ஸ்விஸ் வீரர்கள் (Swiss Guards). இவர்கள்தாம் 15ஆம் நூற்றாண்டிலிருந்து திருத்தந்தையின் பாதுகாவலர்கள். கடந்த ஆறு நூற்றாண்டுகளாக திருத்தந்தை மற்றும் வத்திக்கான் புனிதத் தலங்களின் பாதுகாவலர்களாக இருக்கும் இந்த ராணுவத்தில் சேர்வதற்கான நிபந்தனைகள்: ஸ்விட்சர்லாந்து நாட்டினராக இருக்க வேண்டும், 18-30 வயதுக்குள் திருமணமாகாத கத்தோலிக்க இளைஞராக இருக்க வேண்டும். ஏற்கனவே ஸ்விட்சர்லாந்து நாட்டின் ராணுவத்தில் பணியாற்றி, நன்னடத்தைச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். உலகின் மிகச் சிறிய ராணுவமும் இதுவாகத்தான் இருக்கவேண்டும். ஆம், இவர்களின் எண்ணிக்கை மொத்தமே **135** பேர்தான்.

வரலாற்று, ஓவிய, சிற்ப, கட்டடச் சிறப்புகள் நிறைந்த வத்திக்கான் நகரை யுனெஸ்கோ (UNESCO) ஓர் உலக அருங்காட்சியகமாக (World Heritage) அறிவித்துள்ளது. ஒரு நாடே இப்படி அறிவிக்கப்பட்ட பெருமை வத்திக்கானுக்குத்தான் சேரும்.

முத்தாய்ப்பாக, உலகின் சுற்றுச்சூழல் கவலைகளில் வத்திக்கானும் பங்கேற்கிறது என்பதன் இரண்டு அடையாளங்களைச் சொல்லலாம். முதலாவதாக, வத்திக்கான் நகர் வெளியிடும் கரும்புகைத் (கார்பன்டையாக்சைடு) தாக்கத்தைச் சமப்படுத்தும் விதத்தில் 2007ஆம் அண்டு உறங்கேரி நாட்டின் ஒரு வனப்பகுதியை உருவாக்கியது. இதனால், உலகின் முதல் கரும்புகை சம நாடு (Carbon neutral state) என்னும் பெருமையைப் பெற்றது. தற்பொழுது பூடான், சூரிநாம், ஸ்வீடன் ஆகிய நாடுகள் “கரும்புகையற்ற நாடுகள்” என்னும் பெருமையைப் பெற்றுள்ளன. 2050ஆம் ஆண்டுக்குள் வத்திக்கான் நகரும் முற்றிலும் கரும்புகை இல்லாத நகராக மாறவேண்டும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அண்மையில் இலக்கு வைத்துள்ளார்.

இரண்டாவது, திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் காலத்தில் வத்திக்கான் நகரின் பெரும்பாலான கட்டடங்கள் கதிர் ஆற்றலால் இயங்கும்வகையில் (Solar energy) மாற்றப்பட்டன. உலக வெப்பமயமாதலைத் தடுக்கும் முயற்சியில் வத்திக்கான் முதல் நாடாகத் திகழ்கிறது என்பதிலும் நாம் பெருமையடையலாம்.

**“கிறிஸ் மிலியன்”**



# பனிமய அன்னையின் தங்கத் தேர்ப் பெருவிழா 2023



## வினா - விடைப் போட்டி (2)

பனிமய அன்னையின் 16ஆவது தங்கத் தேர்ப் பெருவிழாவை முன்னிட்டு வினா-விடைப் போட்டி ஒன்று கடந்த மாதம் அறிமுகப்படுத்தப்பட்டது. கடந்த இதழில் "இடியின் இரகசியம்" நூலிலிருந்து 25 கேள்விகளும், அவற்றிற்கான விடைகளும் தரப்பட்டன. தொடர்ந்து வரும் 3 மாதங்கள் பனிமய அன்னை, பனிமய அன்னை பேராலயம், பனிமய அன்னையின் தங்கத் தேர் தொடர்பாக தலா 25 வீதம் மொத்தம் 100 கேள்விகளும், அவற்றின் விடைகளும் தரப்படும். ஆர்வமுள்ள வாசகர்கள் இந்த 100 கேள்விகளையும் படித்துவிட்டு, ஜூலை மாதம் நடைபெறவுள்ள எழுத்துத் தேர்வில் கலந்துகொண்டு பரிசுகளை வெல்லலாம். போட்டியின் தேதி மற்றும் விதிமுறைகள் பின்னர் அறிவிக்கப்படும்.

26. பனிமய அன்னையின் முதல் தேர் எந்த ஆண்டு செய்யப்பட்டது? **1720**ஆம் ஆண்டு தூத்துக்குடியின் சிற்பி ஒருவரால் ஒரு சிறிய முத்துத் தேர் செய்யப்பட்டது.
27. முதல் தேரான சிறிய முத்துத் தேரில் எத்தனை ஆண்டுகள் பனிமய அன்னை ஊர்வலம் வந்தார்கள்? **முப்பத்து மூன்று** ஆண்டுகள்.
28. பொற்தேர் என்று அழைக்கப்பட்ட இரண்டாம் தேர் யாருடைய முயற்சியால் செய்யப்பட்டது? **தேர் மாறன்** என்று அழைக்கப்பட்ட **தொன் கபிரியேல் டி குருஸ் வாஸ் கோமஸ்** (1753-1808) என்பவரால்.
29. இரண்டாம் தேரை உருவாக்கிய சிற்பி யார்? நேவிஸ் பொன்சேக்கா.
30. பொற்தேர் செய்து முடிக்கப்பட்ட ஆண்டு எது? **1806.**
31. அன்றைய நாளில் பொற்தேரை செய்து முடிக்க எவ்வளவு செலவு செய்யப்பட்டது? சுமார் **ஓர் இலட்சம் ரூபாய்**.
32. பொற்தேரின் உச்சியில் இருக்கும் **ஐங்கர விண்மீன்** எதைக் குறிக்கிறது? **"விடியற்கால விண்மீன்"** (ஸ்டெல்லா மாரிஸ்) என்று அழைக்கப்படும் அன்னை மரியாவைக் குறிக்கிறது.
33. உச்சி விண்மீனின் கீழே சுழலும் **ஒன்பது வெண்பொன் மீன்கள்** எதைக் குறிக்கின்றன? மரியா ஒன்பது கோள்களுக்கும், வான்வெளிக்கும், உலகம் அனைத்துக்கும் தலைவி என்பதைக் குறிக்கின்றன.
34. விண்மீன்களுக்குக் கீழே காட்சி தரும் **பொன் மகுடம்** எதைக் குறிக்கிறது? அன்னை மரியா விண்ணக, மண்ணக அரசி என்பதை.
35. பொன் மகுடத்தின்கீழ் நிற்கும் **முதியவரின்** உருவம் யாரைக் குறிக்கிறது? விண்ணகத் தந்தையாம் இறைவனை.
36. தந்தை இறைவனின் உருவத்தைச் சுற்றி **எத்தனை** வானதூதர்கள் இருக்கின்றனர்? **நான்கு வானதூதர்கள்** பறந்த நிலையில் இருக்கிறார்கள்.

37. தந்தை இறைவனின் உருவத்திற்குக் கீழே ஐந்தாவது தட்டில் காட்சி தரும் **வெண் புறா** யாரைக் குறிக்கிறது? **தூய ஆவியாரை.**

38. பொற்தேரின் மேற்பகுதிகளைத் தாங்கிக்கொண்டு நிற்கும் **12 தூண்கள்** யாரைக் குறிக்கின்றன? பழைய ஏற்பாட்டில் **இஸ்ரயேலின் 12 குலங்களையும்**, புதிய ஏற்பாட்டில் இயேசுவின் **12 திருத்தூதர்களையும்** குறிக்கின்றன.

39. பொற் தேரின் **நடுப்பீடத்தில்** வீற்றிருப்பவர் யார்? கையில் குழந்தை இயேசுவைத் தாங்கிய அன்னை மரியா.

40. அன்னை மரியாவின் திருப்பீடத்தைச் சுற்றி எத்தனை வானதூதர்கள் நிற்கிறார்கள்? பக்கத்துக்கு இரண்டாக மொத்தம் **எட்டு வானதூதர்கள்**.

41. பனிமய அன்னையின் திருவுருவத்தைச் சுற்றிலும் எத்தனை மன்னர்கள் நிற்கிறார்கள்? **12 அரசர்கள்**.

42. இந்தப் பன்னிரு அரசர்களும் எந்த வரிசையில் நிற்கிறார்கள்? அன்னையின் திருவுருவத்தின் முன்புறம் நான்கு அரசர்களும், வலப்புறத்தில் மூன்று அரசர்களும், இடப்புறத்தில் மூன்று அரசர்களும், பின்புறத்தில் இரண்டு அரசர்களும் நிற்கிறார்கள்.

43. இந்த 12 அரசர்களும் யார்? இஸ்ரயேலின் முதல் அரசர்களான சவுல், தாவீது, சாலமோன் மற்றும் அவர்களின் வாரிசுகள் என **ஒன்பது** அரசர்களும், குழந்தை இயேசுவை வணங்க வந்த கீழ்த்திசை ஞானிகளான **மூன்று** அரசர்களும்.

44. அரசர்கள் நிற்கும் பீடத்தின் கீழ் செதுக்கப்பட்டுள்ள நான்கு பறவைகள் எவை? **கிளிகள்**.

45. நான்கு கிளிகளும் எதைக் குறிக்கின்றன? பனிமய அன்னையை வணங்கும் கத்தோலிக்கர்கள் **பாண்டிய மன்னர்களின்** வழிவந்தவர்கள் என்பதைக் குறிக்கின்றன.

46. கரம் கூப்பி நிற்கும் **கடல் கன்னியர்** இருவர், **கடல் காளையர்** இருவர் எதைக் குறிக்கின்றனர்? நெய்தல் நிலத்தவரான கடலோரக் கிறிஸ்தவர்கள் பனிமய அன்னைக்கு நன்றி செலுத்துவதைக் குறிக்கின்றனர்.

47. பொற்தேரின் நான்கு பகுதிகளிலும் செதுக்கப்பட்டுள்ள **12 புனிதர்கள்** யாவர்? மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்னும் நான்கு நற்செய்தியாளர்களும், இன்னும் எட்டு புனிதையரும்.

48. பொற்தேரைத் தாங்கும் சக்கரங்கள் எத்தனை? வலப்புறம் இரண்டு பெரிய சக்கரங்கள், இடப்புறம் இரண்டு பெரிய சக்கரங்கள், தேரின் அடிப்பாகத்தில் இரண்டு சிறிய சக்கரங்கள் என மொத்தம் **ஆறு சக்கரங்கள்** உள்ளன.

49. பொற்தேரின் உயரம் எத்தனை அடிகள்? அவை எதைக் குறிக்கின்றன? 53 அடிகள். திருச் செபமாலையின் 53 மணிகளைக் குறிக்கின்றன.

50. பொற்தேரை இழுக்கப் பயன்படுத்தப்படும் கயிறுகளின் நீளம் என்ன? 50 அடிகள்.

*(மேற்கண்ட 25 கேள்விகளும் 1980ஆம் ஆண்டு வெளிவந்த "பொன்விழா மலரில்"* ***திரு. தாமஸ் வாஸ்*** *அவர்களின் "ஓர் அன்னை, ஓர் ஆலயம், ஓர் ஊர்" என்னும் கட்டுரையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன.)*

# விவிலியப் போட்டி 100

தயாரித்தவர் :
சகோ. பிரகாசி FBS

**திருப்பாடல் : 1, 2, 3, 4, 5**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக :**

1. ஆண்டவரே ................................ நீர் ஆசி வழங்குவீர்.
2. ................................ நேர்மையாளரின் மன்றத்தில் இடம் பெறார்.
3. சினமுற்றாலும் ................................ செய்யாதிருங்கள்.
4. உமது முன்னிலையில் ................................ இடமில்லை.
5. ஆண்டவரே நீரே என்னைக் காக்கும் ................................
6. அச்சத்தோடு ஆண்டவரை ................................
7. ................................ என்னும் கேடயத்தால் அவரை மறைத்துக் காப்பீர்.
8. படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி ................................

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.05.2023**

## விவிலியப் போட்டி 99

**ஏப்ரல் 2023** விடைக்குறிப்புகள்

**திருவெளிப்பாடு அதிகாரங்கள் 16 முதல் 20 வரை**

| | | |
|---|---|---|
| 1. | ஆண்டவர் | திவெ 19:16 |
| 2. | இயேசு | திவெ 19:10 |
| 3. | வல்லமையோடு | திவெ 18:2 |
| 4. | உயிர்பெற்று | திவெ 20:4 |
| 5. | விண்ணகம் | திவெ 19:11 |
| 6. | சென்றார் | திவெ 17:3 |
| 7. | ஆமென் | திவெ 19:4 |
| 8. | அல்லேலூயா | திவெ 19:1 |

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் :

**93458 16875** அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 196**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 113**

**விடை எழுதிய அன்பியங்கள் : 27**

**பரிசு பெறுபவர்கள் : 4**

| | | |
|---|---|---|
| 1. | சிறுமலர் அன்பியம் | **எல்சிட்டா ஆனந்த்** |
| 2. | சூசையப்பர் அன்பியம் | **ரூபி கொர்னேலியுஸ்** |
| 3. | திருச்சிலுவை அன்பியம் | **சரோலின் கில்டன்** |
| 4. | வியாகுல மாதா அன்பியம் | **கெலிண்டன்** |

**பாராட்டுக்குரியவர்கள் : 109**

5. அருள்சகோ. ரோசம்மாள்

**அந்தோனியார் அன்பியம்**
6. சரோஜா
7. பிருந்தா சார்லஸ்
8. ஜெயா
9. லூக்காஸ் சகாயம்
10. ரீனா மொறாயிஸ்
11. டெல்பின்ஸ்

**அன்னை தெரசா**
12. சுகன் மோனிஷா
13. சுரேஷ் பிரேமா
14. ரெயிசா சுஜய்
15. ஜூலியட் ஜெயரூபி

**அன்னை வேளாங்கன்னி**
16. டென்சி
17. ஆல்வின் மோத்தா
18. நான்சி
19. ஆரோன் ஷாரோன்

**கிறிஸ்தரசர்**
20. செலஸ்கி கிளமென்ட்
21. ரெக்ஸ் கிரீன்வெல்
22. ஜூலியட் சாவியோ
23. லூரட் வசந்த்
24. எஃப்ரின் ஜூலியா

**தஸ்நேவிஸ் மாதா**
ஒருவருமில்லை

**திவ்யபாலன் அன்பியம்**
25. பிரின்சி
26. சகாயராஜ் தனராஜ்

**பாத்திமா மாதா**
27. ஜஸ்டின் ஸ்நோ குளோரி
28. ஜெசிந்தா கான்ஸ்டன்
29. ராஜா ரீனா
30. ஆல்வின் அனு
31. வினோரின் ஜீவிதா

**இரக்கத்தின் மாதா**
32. பாப்டிஸ்டா
33. சித்ரா மோத்தா
34. பிரைட்டன் ஜெரோபின்
35. ஆக்னல்
36. லூர்து லினட்

**ஜெபமாலை மாதா**
37. சகாயம்மாள் பெனடிக்ட்
38. கல்யாணி செல்வராஜ்
39. ஆரோக்கியசாமி
40. பிரின்சி

**ஜூடு அன்பியம்**
41. அந்தோனிசாமி
42. ட்ரைபேனா
43. டெரன்சியா அரிஸ்டோ

**காவல்தூதர்**
44. வெனிட்டாள்
45. ஜெயா அகஸ்டின்
46. சாந்தி ஆல்ட்ரின்
47. ட்ரினிஷா
48. சார்லட்
49. எலிஜா இம்மானுவேல்
50. ஜான் ஆல்ட்ரின்
51. ஜூலியஸ் தல்மேதா

**குழந்தை தெரசா**
52. கிறிஸ்டி லிஸ்டன்
53. ஷோபனா கோமஸ்
54. பெனி மொறாயிஸ்
55. பெர்லி பென்சன்

**குழந்தை இயேசு**
56. மோனிகா செபாஸ்டின்
57. அந்தோனியப்பா பிச்சம்மாள்
58. எமல்டா
59. பிரான்சிஸ் வாஸ்

**லூர்து மாதா**
60. ஃபிலோ கோமஸ்
61. ஜெனோ சேவியர்
62. ரம்யா
63. ரோஸ்லின் தாமஸ்
64. சாண்டினா
65. ஆலிவர் வி. ராயன்
66. சகாயராணி
67. ரஜூலா ஜான் போஸ்கோ

**மணல் மாதா**
68. கெயிட்டன் ஃபர்னான்டோ
69. ரொசாரி கோமஸ்
70. ஜெயந்தி
71. ரொசாரி ரசிகா

**மிக்கேல் அதிதூதர்**
72. எல்சிட்டா
73. ஷீபா

**பனிமய அன்பியம்**
74. ஜூடு ரதி
75. சுரேஷ் ஆனி
76. மெர்சி கோமஸ்

**பவுலடியார்**
77. ராஜா ரோஸ்லின்
78. ரஸ்கின் வசந்தா
79. ஜான்சன் ஒஃபிலியா
80. லீமா ரோஸ்
81. அபிரின்

**பரிபூரண மாதா**
82. மெடோனா
83. ஜெனிஷா

**பொம்பெயி மாதா**
84. மாத்யூ கர்டோசா
85. இம்மாக்குலேட்
86. டிஃபானி அண்டோ
87. அந்தோனியம்மாள் மச்சாடோ
88. லூடா கான்ஸ்டன்
89. ஜான்சி ராணி

**இராயப்பர்**
90. நேவிசம்மாள்
91. டெய்சி
92. ஷைனி

**சவேரியார்**
93. டெலிலா அமலன்
94. ஆரோக்கியராஜ் ஹெலினா
95. அனுஷ்யா பீட்டர்
96. ரூபா மனுவேல்
97. சகாயம் ஆண்டன்
98. ஜோர்னல் ஜென்சி

**செபஸ்தியார்**
99. அந்தோனியம்மாள் டென்சிங்
100. ஜெசிலா சேவியர்

**சிந்தாத்திரை மாதா**
101. நேசம்
102. ஜூடி ஆரோக்கியராஜ்
103. டிஜேபிஆர் இராயன்
104. மெடோனா ஜோசப்
105. செல்வி
106. ராஜி ஜஸ்டின்

**சிறுமலர் அன்பியம்**
107. செலஸ்டின்
108. விஜி சகாயராஜ்

**சூசையப்பர்**
109. மென்சி
110. கிறிஸ் ரிஜோ
111. ஜூடி கெஜேந்திரன்

**திருச்சிலுவை**
112. சரோலின் கில்டன்

**வியாகுல மாதா**
113. ராஜா ஜரின்

## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 83

### பரிசு பெறுபவர்கள் : 4

114. தூத்துக்குடி பாத்திமா நகர் **மேரி ஹேம்லின்**
115. தூத்துக்குடி ஸ்டேட் பாங்க் காலனி **லிஜியா ஃபர்னான்டோ**
116. தூத்துக்குடி யூதா ததேயு **சகாயராஜ் ரோட்ரிக்ஸ்**
117. சேலம் **சூசைராஜ்**

### பாராட்டுக்குரியவர்கள் : 79

**ஆலந்தலை**
118. ஃபொன்சேகா
119. மரியம்மாள்
120. சுரேஷ் சில்வேரா
121. சகாயராணி

**வீரபாண்டியன்பட்டணம்**
122. ஆன்ட்ரின் சில்வேரா
123. ஷாந்தினி

**ஆறுமுகனேரி**
124. தொம்மை அந்தோனி

**சேதுக்குவாய்த்தான்**
125. ஞானம் பாலசிங்

**புதியம்புத்தூர்**
126. ஹெலன் அன்னமணி

**சென்னை**
127. கமலஜோதி ஜெயசீலன்
128. ஒஃபிலியா தாமஸ்
129. எட்வர்ட்
130. வின்செந்தி

**பாளையங்கோட்டை**
131. பிரேமா குணசீலன்
132. சுவர்ணா
133. டெனிசா ஃபர்னான்டோ

**பேட்டை**
134. ஹெலனிட்டா

**கயத்தாறு**
135. அமல்ராஜ்

**உரியூர்குப்பம்**
136. சகோ. லெட்டீசியா

**பெரியகுளம்**
137. குழந்தை தெரஸ்

**திண்டுக்கல்**
138. மரிய மதலேன்
139. ஜெர்மேன்
140. ரொசாலி

**கோயம்புத்தூர்**
141. சகோ. லூக்காஸ்
142. ஆஷா தனசீலன்

**பல்லடம்**
143. பிரான்சிஸ் ஆர்லன்

**திருமானூர், கும்பகோணம்**
144. பீட்டர்

**அரக்கோணம்**
145. குமாரி சந்திரசேகர்

**திருச்சி**
146. மோனிட்டா கிறிஸ்டி
147. மேத்யூ விவேக்
148. டோனி
149. சில்வியா மேரி

**மதுரை**
150. சகோ. அப்போலின்

**வடக்குத்து**
151. ஹென்றிதாஸ்

**பாம்பன்**
152. சுதா

**பரமக்குடி**
153. சீமோன் விமல் சாந்தி

**கும்பகோணம்**
154. குழந்தை தெரஸ்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
155. பெனிட்டா
156. சுசீலன்
157. ரமோலா கமிலஸ்
158. ரிமோல்டா
159. ஜேன் கிளைட்டன்
160. ஜூலியட் வாஸ்
161. ஜேசு பாலு

**குரூஸ்புரம்**
162. ஆசீர்வாதம்
163. தமிழ்ச் செல்வன்
164. பௌவுசி ஜோ மைக்கேல்
165. டெல்ஃபின்
166. பிளசி செல்வராஜன்
167. ஜான்சி மென்டிஸ்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
168. சுகிர்தா

**யூதா ததேயு கோவில்**
169. ரோஸ் சேவியர்
170. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்

**காந்திநகர்**
171. சாந்தினி
172. ரியாலினோ
173. அன்சிட்டா
174. யூஜினியா
175. ரமேஷ் நர்மதா
176. அனித்தா
177. பேபி வால்டர்

**லூர்தம்மாள்புரம்**
178. ரெனிஸ்டன் ஜெர்லின்

**சார்லஸ் கோவில்**
179. சகாயிற்றா மச்சாது

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
180. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்
181. லிஜியா ஃபர்னான்டோ
182. ஜெசிந்தா ஃபர்னான்டோ
183. செக்கரியா சாமுவேல்

**இஞ்ஞாசியார்புரம்**
184. அற்புத செல்வி
185. சூசை நவீன்

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
186. விர்ஜின்
187. தயாபர ராணி

**அந்தோனியார் கோவில்**
188. சோஃபியா விஜய்
189. மென்சிலா லொயோலா
190. இருதயம்மாள் கபிரியேல்
191. சுஜாதா மகேஷ்

**திரேஸ்புரம்**
192. கோல்வின் ஜேசுராஜ்
193. ஃபிலோ சான்ட்ரியா
194. ஜெற்ருலியா

**பாத்திமா நகர்**
195. ஹேம்லின் விஜய்

**பெத்தனி கான்வென்ட்**
196. சகோ. ஜெமினா

**இம்மாதம் நமது விவிலியப் போட்டி 100ஐ அடைந்துள்ளது. கடந்த 12 மாதங்களில் சரியான விடை எழுதியவர்கள் தங்கள் பெயர் மற்றும் முகவரியை சகோ. பெல் கிளிண்டன் (9345816875) அவர்களிடம் தெரிவிக்கவும். பெயர்கள் சரி பார்க்கப்பட்டு, அனைவருக்கும் பரிசுகள் வழங்கப்படும்.**



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 196**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 196**



தங்கத் தேர் 1 கவிதைகள்

# பொற்தேரின் தங்கத் தாய்!

பனிமயத் தாய் மரியே. பார் போற்றும் தாரகையே
பாருலகின் வானமுதே பாடுகிறோம் நின் புகழை
பாசத்தின் ஊரணியே, பாவிகளின் அடைக்கலமே
பதம் நாடி வருகின்றோம், அருளாசி தாருமம்மா!

தங்கத் தேரினிலே தாரகையாய் நீ ஜொலிக்க
தரணியர் புடைசூழ தாயே நீ வலம் வருவாய்
தங்கச் சுடரொளியில் மங்காப் புகழ் ஒலிக்க
தாயின் பிள்ளைகளாய் ஒளிரச் செய்யுமம்மா!

முத்து நகர் பக்தியிலே பரவசமாய் மூழ்கையிலே
முத்த மழையினிலே நின்பாதம் நனைகையிலே
அன்பாய் அணைத்தெம்மை ஆசீர்வதிப்பாயே
அன்பறெம் உளம்தன்னை பனிமயமாய் மாற்றுமம்மா!

பாம்பை மிதித்தவளே, பாவ இருள் களைந்தவளே
பரமனருள் பரிவினையே கருவினிலே பெற்றவளே
பாசத்தால் நிறைந்ததனால் திராட்சை இரசம் தந்தவளே
பயணத்தில் வழித்துணையாய் எம்மோடு வாருமம்மா!

தேன் மதுரத் தேவதையே, தெவிட்டாத வான் மழையே
தேடிக் கண்டடைந்த தெய்வத்தின் அன்னை நீயே
வான் புகழ விண் தந்தை வார்த்தெடுத்த பொற்சிலையே
வாயாரப் போற்றுகிறோம், வாழும் அருள் தாருமம்மா!

அருள்சகோ. ரொசாரியோ FMM



# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 46)

## மே - 2023

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி பால் ரோமன் | 94889 42202 |
| களப் பணியாளர் | : | சகோதரர் பெல் கிளிண்டன் | 9345816875 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|---|
| காலை | 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை | 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ கூட்டுத் திருமணம் : 20.08.2023
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 28.05.2023
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 30.07.2023

உறுதிப்பூசுதல் மற்றும் புதுநன்மை அருள்சாதனம் பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.

## பனிமயச் சுவடுகள்

### (பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)

450. மாதத்தின் முதல் சனியாகிய **01.04.2023** அன்று மாலையில் சப்பரப் பவனியும், நற்கருணை ஆசீரும் நடைபெற்றன. இவை நேரலையாகவும் ஒளிபரப்பப்பட்டன.

451. **தவக்கால சிறப்பு நிகழ்வு 10:** "பாடுகளின் ஞாயிறு" என்றழைக்கப்படும் குருத்து ஞாயிறு (02.04.2023) அன்று காலை 11.00 முதல் 03.00 மணிவரை திருச்சிலுவை சிற்றாலயத்தில் அருள்பணி. **ஜெமல்ஸ்** (பாளை மறைமாவட்டம்) அவர்கள் வழங்கிய "சிலுவையிலிருந்து ஏழு வார்த்தைகள்" என்னும் நோன்புத் தியானம் நடைபெற்றது. ஏறக்குறைய 100 பேர் கலந்துகொண்டனர்.

452. **புனித வாரத்தை முன்னிட்டு** திங்கள் (03.04.2023), புதன் (05.04.2023) இரு நாள்களிலும் மாலைத்திருப்பலி முடிந்ததும் ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. பெரிய வியாழன் (06.04.2022) அன்று காலை 10.00 முதல் 01.00 மணி வரையும் ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்பட்டது.

453. பெரிய வியாழன், பெரிய வெள்ளி, பெரிய சனி உயிர்ப்புத் திருவிழிப்பு ஆகிய மூன்று திருநிகழ்வுகளுக்கும் திருச்சி புனித பவுல் குருத்துவக் கல்லூரி முதல்வர் அருள்முனைவர் **ஆன்ட்ரு டிரோஸ்** தலைமையேற்றுச் சிறப்பித்தார்கள்.

454. தங்கத் தேர் அலங்காரக் கலைஞர்களின் 40 நாள் சுத்தப்படுத்தும் பணியைத் தொடர்ந்து, அலங்காரப் பணிகள் 09.04.2023 உயிர்ப்பு ஞாயிறு அன்று காலை சிறப்பு இறைவேண்டலுடன் தொடங்கியது.

455. பாஸ்கா புனித **நீரால் பங்கின் அனைத்து இல்லங்களையும் மந்திரிக்கும் திருநிகழ்வு** உயிர்ப்பு விழாவுக்கு மறுநாள் 10.04.2023 திங்கள் மாலையில் நடைபெற்றது. பங்குத் தந்தையின் தலைமையில் அருள்தந்தையர்கள், அருள்சகோதரர்கள் கொண்ட 15 பேர் குழு நமது பங்கின் 28 அன்பியங்களிலுள்ள அனைத்து இல்லங்களையும் புனித நீர் தெளித்து ஆசிர்வதித்தார்கள். இதற்கு உறுதுணையாயிருந்த அன்பிய வழிகாட்டிகள், தன்னார்வலர்களுக்கு நன்றி.

456. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் 10ஆவது பொதுக் குழுக் கூட்டம் 11.04.2023 செவ்வாய் மாலையில் நடைபெற்றது. தேர்ப் பிறையைப் புதிதாகக் கட்டுதல், கூட்டுத் திருமணத்திற்குத் திருமாங்கல்யங்கள் செய்தல் உள்ளிட்டவை தொடர்பான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

457. "திருத்தூதர் பணிகளின் வியத்தகு மாந்தர்" என்னும் விவிலியப் பாசறை (94) 12.04.2023 புதன் மாலை 06.15 மணிக்கு லூர்துமாதா கெபியில் நடைபெற்றது. அருள்சாதனங்கள் பெறவிருப்போர் உட்பட 46 பேர் கலந்துகொண்டனர்.

458. தங்கத் தேர் ஆசிகளுக்காக **"100 நாள் தொடர் மன்றாட்டு"** 14.04.2023 வெள்ளி அன்று தொடங்கியது. பெருவிழா சிறப்பாக நடைபெற இல்லங்களில் 100 நாள்கள் தொடர்ந்து மன்றாடுவதாக 200க்கும் மேற்பட்டோர் முன்வந்துள்ளனர்.

459. **"நோயாளர்கள் நலம் பெற" மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (30)** 22.04.2023 அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. இவ்வழிபாட்டில் பல நோயாளர்கள் நேரில்

கலந்துகொண்டனர். நேரில் வரவியலாதவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டு அவர்களின் உடல், மன, ஆன்ம நலனுக்காக சிறப்பு மன்றாட்டுகள் ஏறெடுக்கப்பட்டன.

460. “திருவிவிலியம் காட்டும் குடும்ப மாந்தர்” என்னும் விவிலியப் பாசறை (95) 27.04.2023 வியாழன் மாலை 06.15 மணிக்கு லூர்துமாதா கெபியில் நடைபெற்றது. அருள்சாதனங்கள் பெறவிருப்போர் உட்பட 46 பேர் கலந்துகொண்டனர்.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 124. | ஷெக்கினா ரோஸ் | ராயப்பன் - கலா | 09.04.2023 | இரக்கத்தின் மாதா |
| 125. | இவான் ஃபெலிக்ஸ் | வினோத் - தாமஸம்மாள் | 16.04.2023 | பரிபூரண மாதா |
| 126. | அஸ்டாரா | அவினாஷ் - மேரி நிபா | 30.04.2023 | சூசையப்பர் |



### *வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 143. | ஆன்ரியா | டென்சன் - ஆன்ஸி | 16.04.2023 | இரக்கத்தின்மாதா |



### *ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | திருமணநாள் |
|---|---|---|---|
| 111. | ஜெரோம் - சாரோனின் ரோஜா | சவேரியார் | 23.04.2023 |



### *இறைவனைப் போற்றுகிறோம்*

### 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 30 | ரோசையா கொரைறா | ஹெஸ்டன் | 04.04.2023 | ஜெபமாலை மாதா |
| 31. | டெனிஸ் வாய்ஸ் | லிண்டா | 25.04.2023 | பாத்திமா மாதா |



### *செபிக்கின்றோம்*

### 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 152. | ஆக்னல் | பிரவீணா | 02.03.2023 | திருச்சிலுவை |
| 153. | ரோசையா கொரைறா | ஜெனோ கொரைறா | 04.04.2023 | ஜெபமாலை மாதா |
| 154. | பீட்டர் ஃபர்னான்டோ | விமல்டா | 20.04.2023 | இராயப்பர் |
| 155. | டெனிஸ் வாய்ஸ் | லிண்டா | 25.04.2023 | பாத்திமா மாதா |

## நடைபெற இருப்பவை

- ★ இந்த ஆண்டுக்கான **“விடுமுறை விவிலியப் பள்ளி”** எதிர்வரும் 01.05.2023 திங்கள் முதல் 10.05.2023 புதன் வரை 10 நாள்கள் நடைபெறும்.
- ★ 05.05.2023 தலை வெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- ★ 06.05.2023 **முதல் சனி** அன்று மாலையில் சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூட்யூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.
- ★ புதுநன்மை மற்றும் உறுதிப்பூசுதல் பெறுவோருக்கான **சிறப்பு தியானம்** 14.05.2023 ஞாயிறு காலை 10.30 முதல் 12.30 வரையும், பிற்பகல் 01.30 முதல் 04.00 வரையும் நடைபெறும்.
- ★ “குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்கான” **சிறப்பு பனிமய நோன்பு வழிபாடு** 3ஆம் சனிக்குப் பதிலாக, 3ஆம் ஞாயிறான 21.05.2023 அன்று பகல் 12.00 முதல் 03.00 வரை நடைபெறும். விடுமுறை நாளில் நடைபெறும் இவ்வழிபாட்டில் தம்பதியர் இறைப்பற்றோடு கலந்துகொண்டு பனிமய அன்னையின் பரிந்துரையால் குழந்தைச் செல்வத்தைப் பெற்றுக்கொள்வார்களாக.
- ★ பேராலயப் பங்கு மற்றும் பிற பங்குகளைச் சேர்ந்த 65 இளையோருக்கு 28.05.2023 ஞாயிறு மாலை 05.00 மணித் திருப்பலியில் மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகையால் உறுதிப்பூசுதல் அருளடையாளம் வழங்கப்படும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ★ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ★ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண் | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 125 | 02.05.2023 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | தூய வாழ்வு வாழ்வோம் |
| 126. | 09.05.2023 | செவ்வாய் | அருள்பணி. இசிதோர் | உயிர்ப்பின் வாழ்வு வாழ்வோம் |
| 127. | 16.05.2023 | செவ்வாய் | அருள்பணி. மரியதாஸ் | சாட்சிய வாழ்வு வாழ்வோம் |
| 128 | 23.05.2023 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி | வெற்றி வாழ்வு வாழ்வோம் |
| 129 | 30.05.2023 | செவ்வாய் | அருள்பணி. கிராசிஸ் | தூய ஆவியின் துணையில் வாழ்வோம் |



# தங்கத் தேர் 2023 மைல் கற்கள்



1. **பொற்தேருக்கான தீர்மானம்.** தூத்துக்குடி மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை ஒட்டி பனிமய அன்னைப் பேராலயத்தில் பனிமய அன்னையின் தங்கத் தேர் 16ஆவது முறையாகப் பவனி வரவேண்டும் என்னும் தீர்மானம் **21.04.2022** அன்று நடைபெற்ற **பங்கு மேய்ப்புப் பணிப் பொதுக்குழுவில்** ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. **ஆயருக்குக் கடிதம்.** இந்தத் தீர்மானத்தின் அடிப்படையில் பேராலய அதிபர் அருள்பணி. குமார்ராஜா அவர்களால் **31.05.2022** அன்று தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் அவர்களுக்கு விண்ணப்பக் **கடிதம்** அனுப்பப்பட்டது.

3. **ஆயரின் அனுமதி.** மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்கள் தலைமையில் **16.06.2022** அன்று நடைபெற்ற மறைமாவட்ட ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் தங்கத் தேர்ப் பவனிக்கு அனுமதி வழங்கப்பட்டது. இது தொடர்பான அனுமதிக் கடிதம் 29.06.2022 அன்று பேராலய அதிபருக்கு வழங்கப்பட்டது.

4. **ஆயரின் அறிவிப்பு.** பனிமய அன்னையின் 440ஆவது பெருவிழா நாளான **05.08.2022** அன்று மேதகு ஆயர் ஸ்டீபன் ஆண்டகை அடுத்த ஆண்டு தங்கத் தேர் பவனி வரும் என்று பெருத்த கரவொலிக்கிடையே அறிவித்தார்கள். பேராலய மணிகள் ஒலித்தன.

5. **பொதுக் குழுவில் திட்டமிடல்.** பேராலய மேய்ப்புப் பணிப் **பொதுக்குழுவின் 8ஆவது கூட்டம் 19.08.2022** அன்று நடைபெற்றது. தங்கத் தேர்ப் பணிகள் பற்றிக் கலந்தாய்வு செய்யப்பட்டு, பல பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டன.

6. **தண்டல்மாருடன் கலந்தாய்வு.** **21.08.2022** ஞாயிறு அன்று தண்டல்மார், தங்கத் தேர் அனுபவம் உள்ளவர்கள் ஆகியோருடன் கருக்குழு உறுப்பினர்கள் தேர்ப்பிறைக்குச் சென்று தேரைப் பார்வையிட்டார்கள். தொடர்ந்து **26.08.2022** வெள்ளி அன்று தண்டல்மார்களை அழைத்து, அவர்களின் ஆலோசனை பெறப்பட்டது.

7. **தேர்ப் பணிக்குழுக்கள்.** 29.08.2022 அன்று நடைபெற்ற செயற்குழு பங்குத் தந்தையால் உருவாக்கப்பட்ட பின்வரும் குழுக்களுக்கு ஒப்புதல் தந்தது.

1. பங்கு மற்றும் தேர் ஒருங்கிணைப்புக் குழு (Coordination Committee)
2. வழிநடத்தும் குழு (Steering Committee)
3. ஆலோசனைக் குழு (Advisory Committee)
4. தொழில்நுட்பக் குழு (Technical Committee)
5. நிதி திரட்டும் குழு (Fund Raising Committee)
6. பொருள் வாங்கும் குழு (Purchasing Committee)
7. தேர் அலங்காரக் குழு (Decoration Committee)
8. முக்கியஸ்தர்களை வரவேற்கும் குழு (VIP Escort)

9. தொண்டர்கள் பொறுப்புக் குழு (Volunteers Committee)

10. வரவேற்பு மற்றும் முதலுதவிக் குழு (Reception & First Aid Committee)

11. பரிந்துரை செபக் குழு (Intercessary Prayer Committee)

12. தங்கத் தேர் மலர்க் குழு (Souvenir Committee)

**8. தனி வங்கிக் கணக்கு தொடக்கம்.** 06.09.2022 அன்று நடைபெற்ற முதல் கலந்தாய்வுக் கூட்ட முடிவின்படி தேர் வரவு செலவுகளுக்கென்று தனியாக ஒரு வங்கிக் கணக்கு இந்தியன் வங்கியில் தொடங்கப்பட்டது.

**9. 300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு:** தங்கத் தேர்ப் பணிகள் சிறப்பாக நடைபெற இறையாசி வேண்டி 25.09.2022 ஞாயிறு முதல் 300 நாள் தொடர் பரிந்துரை மன்றாட்டு தொடங்கப்பட்டது. அனைத்து இல்லங்களும் மூன்று குழுக்களாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு நாளும் மூன்று இல்லங்களுக்குப் பனிமய அன்னையின் திருச்சுரூபம் எடுத்துச் செல்லப்பட்டு பரிந்துரை மன்றாட்டுகள் ஏறெடுக்கப்படுகின்றன.

**10. "டிஜிடல் கவுண்ட் டவுண்".** தேர்ப் பெருவிழாவுக்கு இன்னும் எத்தனை நாள்கள் உள்ளன என்பதைக் காட்டும் "டிஜிடல் கவுண்ட் டவுண்" இளம் அறிவியலாளர் திரு. ரெசிங்டன் அவர்களால் இலவசமாக செய்து தரப்பட்டு "300 நாள்" காட்டிய 25.09.2022 ஞாயிறு அன்று பேராலய மண்டபத்தில் வைக்கப்பட்டது.

**11. தேர் இழுத்துவிடப்பட்டது.** தேர்ப் பராமரிப்புப் பணிகளுக்காக 09.10.2022 ஞாயிறு அன்று தங்கத் தேர் பேராலய வளாகத்திலுள்ள பிறையில் இழுத்துவிடப்பட்டது.

**12. தேர்ப் பிறையில் கண்காணிப்புக் கேமராக்கள்.** தேர்ப்பிறையைக் கண்காணிக்க 3 கண்காணிப்புக் கேமராக்கள் நிறுவப்பட்டன. காற்று வெளியேறுவதற்காக 6 "வெளியேற்று விசிறிகள்" (Exhaust Fans) வைக்கப்பட்டன.

**13. நன்கொடை ரசீது புத்தகங்கள்.** நன்கொடை பெறுவதற்காக ரூ. பத்தாயிரம், ஐயாயிரம், இரண்டாயிரம், ஆயிரம், ஐநூறு ஆகிய மதிப்புகளில் 1500 புத்தகங்கள் அச்சிடப்பட்டன.

**14. கூட்டுத் திருமண அழைப்பு.** 2022 மே மாதம் தூத்துக்குடி மறைவட்ட அளவில் நடத்தப்பட்ட 14 இலவச திருமணங்களைத் தொடர்ந்து, மறைமாவட்ட நூற்றாண்டு விழாவை முன்னிட்டு 25 மண இணையர்களுக்கு கூட்டுத் திருமணம் நடத்த தூத்துக்குடி மறைமாவட்டத்தின் 119 பங்குகளுக்கும் பதிவுத் தபாலில் அழைப்பு அனுப்பப்பட்டது.

**15. கேரளாவிலிருந்து தேக்கு மரங்கள்.** தேரின் அடிப்பகுதியைப் புதிதாகச் செய்துவிடலாம் என்று முடிவெடுக்கப்பட்டதால், 01.11.2022 அன்று ஒரு குழுவினர் கேரளாவின் நிலம்பூர் சென்று ரூ. 50 இலட்சம் மதிப்பில் 18 தேக்கு மரத் தடிகள் வாங்கி வந்தனர்.

**16. தேரின் வடிவமைப்பு.** தேரின் பாகங்களை வடிவமைக்க (Carving and Designing) தென்காசி அருகிலுள்ள ஆயக்குடியிலுள்ள மேக்ஸ்வுட் இன்டீரியர் நிறுவனத்தின் உரிமையாளர் திரு. ஜெயகுருவுடன் ஒப்பந்தம் செய்யப்பட்டது.

**17. தங்கத் தேர் ஆசிகளுக்காக தொடர் நற்கருணை ஆராதனை.** 20.11.2022 கிறிஸ்தரசர் பெருவிழா அன்று காலை 10.30 முதல் மாலை 05.00 வரை தங்கத் தேர் ஆசிகளுக்காக தொடர் நற்கருணை ஆராதனை நடத்தப்பட்டது.

# விண்ணக வாழ்வின் 50ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நேர்மையாளர் ஆண்டவரில் அகமகிழ்வர்,
நேரிய உள்ளத்தோர் அவரைப் போற்றிடுவர்." (திபா 64:10)



## P. பொம்பே தாசன் பர்னாண்டஸ்

மண்ணில் : 08.09.1908
விண்ணில் : 28.05.1973
வயது : 65



## S. தர்மசெல்வி மச்சாது

மண்ணில் : 16.09.1916
விண்ணில் : 12.05.1987
வயது : 71

என்றும் தங்கள் நினைவில் வாழும்

**மக்கள், மருமக்கள்,**
**பேரன்கள், பேத்திகள், பூட்டன்கள், பூட்டிகள்,**
**ஓட்டன்கள், ஓட்டிகள்**

2. மணல் தெரு, தூத்துக்குடி.




## முதலாம் ஆண்டு
## நினைவு அஞ்சலி

# விஜித்திரன்

இறப்பு
**11.05.2022**

## 25ஆம் ஆண்டு
## நினைவு அஞ்சலி

# யூஜின்



இறப்பு
**02.01.1999**

இழப்பின் அருமை
இல்லாதபோதுதான் தெரிகிறது

என்றும் உங்கள் நினைவில்...
நாங்கள்

# 50வது திருமண ஆண்டு பொன்விழா

## 02.05.2023

# பி. மைக்கேல்
# சேசம்மாள்



பிறந்த நாள்
09.05.1945

திருமண நாள்
02.05.1973

வெள்ளி விழா
02.05.1998

இறந்த நாள்
28.07.2020

**என் வாழ்நாள் அனைத்துமான உங்களை**
**சில வரிகளுக்குள் விதைக்க விழைகிறேன்.**

வழித்துணையாக நீங்களிருக்க
- வருத்தமின்றி நானிருந்தேன்.

உறுதுணையாக நீங்களிருக்க
- உள்ளம் மகிழ்ந்து வாழ்ந்து வந்தேன்.

நாற்பத்தெட்டு ஆண்டுகள் கலகம் இல்லாத வாழ்வில்
- என் கலங்கரை விளக்காக கலந்தீர்கள்.

இன்று :
- ஐம்பதாண்டு திருமண விழாவில் இணைந்திருப்போம்
என்று எண்ணி கனவு கண்டேன்

ஆனால் இன்று,
நீரற்ற மரம்போல் நிலையற்று சாய்கிறேன்.
நிரந்தர உறவின்றி நிர்க்கதியாக உணர்கிறேன்.

**உமது நீங்கா நினைவுகளே நிகழ்கால நிம்மதி!**

*மனைவி : சேசம்மாள் பி.ராயர்*

SHINY
Ph : 98421 31493